விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 308 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை (22.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# ரவி செனவிரத்னவை உடன் பதவி நீக்குங்கள்

## ஈஸ்டர் தாக்குதல் விபரம் முன்னரே அறிவிக்கப்பட்டது - உதய கம்மன்பில




(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பிரதான குற்றவாளிகளில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ள ரவி செனவிரத்னவை பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என பிவித்துரு ஹெல உறுமியவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## டாடா குழுமம் இலங்கைக்கு 50 அம்புலன்ஸ் வழங்க முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு 50 அம்புலன்ஸ் வாகனங்களை வழங்க இந்தியாவின் பிரபல வாகன உற்பத்தி நிறுவனமான டாடா குழுமம் முடிவு செய்துள்ளது எனத் தெரி 16

## காற்றழுத்த தாழ்வு நிலை மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் வடக்கு அந்தமான் கடற்பிராந்தியங்களுக்குள் பயணிப்பதைத் தவிர்க்குமாறு கடல்சார் தொழிலில் ஈடுபடுவோர் 15

## பொதுத் தேர்தலை நடத்துவது அரசியல் சாசனத்துக்கு எதிரானது

### உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் அமைப்புச் செயற்பாட்டாளரும் "நாம் இலங்கை தேசிய அமைப்பின்" அழைப்பாளருமான எச்.எம். பிரியந்த ஹேரத்தினால் குறித்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதி 15

## வன்னி மாவட்டத்தில் தேர்தலை நிறுத்துக

### நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இன்று பரிசீலனைக்கு

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தில் தேர்தலை நிறுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. 15

## சுமார் 34 வருடங்களின் பின்னர் காங்கேசன்துறை ஐயனார் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை மேற்கு, ஐயனார் ஆலய கும்பாபிஷேகம் நேற்றுத் திங்கட்கிழமை பெருமளவு ஐயனார் அடியவர்கள் சூழ இனிதே நடைபெற்றது.



யுத்தம் காரணமாக வலி 15

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வருவோம்

### ஊடக சந்திப்பில் உதய கம்மன்பில

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வருவோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் மிக முக்கிய சூத்திரதாரியாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன காணப்படுகிறார்.

அவரை உடனடியாக ஜனாதிபதி 15

## ஐ.எம்.எப் இணக்கப்பாடுகளைப் பாதுகாத்து அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்

### முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்




(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளைப்பாதுகாத்துக் கொண்டே அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இது இந்த அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பாரிய சவாலாகும்.

அவ்வாறு செயற்படாவிட்டால் நாடு மீண்டும் 16

## ஐ.எம்.எப் உடன்படிக்கையை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் - சஜித்



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலினூடாக தமது தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அதிகாரம் கிடைக்கப் பெறுமானால், நாட்டிற்கு நன்மை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன் - ஜனாதிபதி

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கட்டுநாயக்கவில் நேற்று முன்தினம் (20) தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மக்கள் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் பொலிஸ் திணைக்களத்தை விசாரணைக்கு ஏற்ற துறையாக மாற்றினோம். இதனால் பலர் தற்போது குழம்பியுள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இருந்து ஆட்சியைப் பிடிக்க முயற்சித்தவர்கள் இன்று 5 ஆண்டுகளுக்கு பின்னரே விழித்துள்ளனர்.

இப்போது அந்த அறிக்கை கொடு, இந்த அறிக்கை கொடு என்கிறார்கள். அந்த இரண்டு அறிக்கைகளும் ரணில் விக்கிரமசிங்கவின் அறிக்கைகள்.

அது இரண்டும் விசாரணைக் குழுக்கள் அல்ல. நான் வந்ததும் அந்த அறிக்கைகளுக்கு என்ன நடந்தது என்று முன்னாள் ஜனாதிபதி செயலாளரிடம் கேட்டேன்.

இந்த விசாரணையை நசுக்கவே ரணில் விக்கிரமசிங்க விரும்பினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முறையான விசாரணையை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளோம்.

கோமாவில் இருந்தவர்கள் தற்போதே விழித்துள்ளனர். அதனை நசுக்குவதற்கும், சுருக்குவதற்கும். இந்த நபரின் தலையீடு உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது அல்ல.

எனவே, நாங்கள் அவர்களுக்கு அடிபணிய மாட்டோம், அதில் சிக்கிக்கொள்ளவும் மாட்டோம். நியாயமான விசாரணை நடத்தி உண்மையை வெளிப்படுத்துவோம்.

நாம் எதை மறைக்க வேண்டும்? யாரைக் காப்பாற்ற வேண்டும்?

தேசிய மக்கள் சக்தியான நாங்கள் மூழ்கும் வாளிக்காக தடுமாறவும் மாட்டோம், வாளியை மூழ்கடிப்பவர்களுக்கு இடமளிக்கவும் மாட்டோம் என்றார். (ம-7)

## விலையேற்றங்களின் மாஃபியா ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## ஜனாதிபதியிடம் கேள்வி

அரிசி, பெற்றோல் மற்றும் முட்டைகளின் விலையேற்றங்களில் மாஃபியா இருப்பதாக தேர்தல் காலத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதிலும் புதிய ஜனாதிபதி அது தொடர்பாக ஏன் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், அருணலு ஜனதா பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ஜனக ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம், தேர்தல் காலத்தில் குறித்த மாபியாக்களை ஒழிப்பதாகத் தெரிவித்த கருத்துக்களை நம்பி, மக்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ளனர் எனவும், தற்போது அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் எனவும் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த மாஃபியாக்களை ஒழிப்பதற்கு ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் உள்ள போதும் அவர் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை எனவும் ஜனக ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அதுமட்டுமல்லாது ஜனாதிபதியாக அநுரகுமார வந்த பின்னரும் முன்பிருந்த விலைகளே நாட்டில் காணப்படுகின்றன எனவும், விலைகளை ஜனாதிபதி அவ்வாறே வைத்திருக்கிறார் என்றால் அவர் தேர்வாகியதில் எந்த அர்த்தமும் இல்லை எனவும் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## தனியார் வகுப்புக்குச் சென்ற

# 17 வயது மாணவி சடலமாக மீட்பு

தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுச்சென்ற 17 வயதுடைய இரண்டு மாணவிகளில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகியங்கனை, லொக்கலோ ஓயாவில் இருந்து நேற்று திங்கட்கிழமை காலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவியுடன் சென்ற மற்றைய மாணவி தற்போது ரிதிமாலியத்த பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இரண்டு மாணவிகளும் ஒரே பாடசாலையில் படிக்கும் நண்பிகள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பதுளை நகரில் உள்ள தனியார் வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே வீட்டிலிருந்து சென்ற மேற்படி இரண்டு மாணவிகளும் வீடு திரும்பாததால் அவர்களின் பெற்றோர்கள் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி றுமினா றெஜி மோகனதாஸ் அவர்களின் அன்புத் தாயார்



அமரர்

பொனிப்பாஸ் மெற்றிலம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்


## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடும் போது நேற்று அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியில் சிறு வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்று (இன்றைய) நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 297.60 ரூபாவாகவும், கொள்வனவு விலை 288.61 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 216.94 ரூபாவாகவும், கொள்வனவு விலை 207.64 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனைப் பெறுமதி 325.01 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 312.06 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனைப் பெறுமதி 389.92 ரூபாவாகவும், கொள் வனவு பெறுமதி 375.34 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ம-7)

## தேர்தல் சட்டங்களை மீறி

# சுவரொட்டிகளை ஒட்டிய ஐவர் கைது

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகளை, தேர்தல் சட்டங்களை மீறி ஒட்டிய ஐந்து பேர் பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


நேற்று அதிகாலை முச்சக்கர வண்டி மற்றும் உந்துருளியில் பிரவேசித்தவர்கள் பொரளை மயானத்திற்கு அருகில் சுவரொட்டிகளை ஒட்டிய போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து பெருந்தொகையான சுவரொட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி மற்றும் உந்துருளி என்பவற்றை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அமைதிகாக்கும் படையை இலங்கைக்கு அனுப்பியது தவறு



## ஒத்துக்கொள்ளும் ஜெய்சங்கர்

(டில்லி)

**37 வருடங்களுக்கு முன்னர் 1987ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பியது இந்திய அரசாங்கத்தின் மாபெரும் தவறு என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை அவர் சமீபத்தில் வெளியிட்ட தி இந்தியாவே புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

பாத்ஃபைண்டர் அறக் கட்டளையால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட "இந்திய மாவத்தை" என்ற புத்தகம் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சில சிறப்புக் குறிப்புகளை உள்ளடக்கியுள்ளது.

ஆரம்பம் முதலே இலங்கை இந்தியாவுக்கு சவாலாக இருந்தது. நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அக்கறை கொண்டு, இந்தியாவினால் உத்தரவாதமான தீர்வைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அந்த முயற்சி ஆரம்பத்திலேயே தவறாகிவிட்டது. ஆனால் இது சாதாரணமான நடவடிக்கையல்ல என இந்திய வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் அமைதி காக்கும் நடவடிக்கைக்காக இந்தியா கடுமையாக உழைத்த போதிலும், அது குறைவான கவனத்தையே பெற்றது என வெளிவிவகார அமைச்சர் தனது நூலில் வலியுறுத்தியுள்ளார்.

37 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா தலையிட்டமை குறித்து வெளிவிவகாரத்துறையில் உலகப் புகழ்பெற்ற அறிஞரான இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மீள ஒப்படைக்கப்பட்ட துப்பாக்கிகள்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சிவில் பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் 50 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் தற்பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட அனைத்து துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் என்பவற்றை தற்காலிகமாக அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் இவ்வாறு துப்பாக்கிகள் மீள பெறப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் வெலிசரவில் உள்ள அரசாங்கத்தின் வணிக வெடி மருந்து களஞ்சியசாலையில் உரிய துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அனைத்து உரிமதாரர்களுக்கும் அறிவித்திருந்தது.

இந்நிலையில், ஏறக்குறைய 50 துப்பாக்கிகள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும் பாதுகாப்பு அமைச்சு பல்வேறு காரணங்களுக்காக சுமார் 1650 துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் குறித்த திகதிக்கு முன்னர் அனைத்து துப்பாக்கிகள் மற்றும் ரவைகளும் கையளிக்கப்பட வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அனைத்து துப்பாக்கிகளையும் ஒப்படைக்க தவறும் பட்சத்தில், 1916ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின்படி சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என சம்பந்தப்பட்ட உரிமதாரர்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீளாய்வு செய்ததன் பின்னர், அவற்றை மீண்டும் வழங்க எதிர்பார்த்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க தடை

## இடைநிறுத்திய தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

மாகாண ஆளுநர்களின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களால் மேற்பார்வையிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதியின் உத்தரவை தேர்தல் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது. ஆளுநர்கள் அரசியல் ரீதியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இதுபோன்ற நடவடிக்கைகள் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமையும் என்று தேர்தல் ஆணையகம் கருதுகிறது.

முன்னதாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து செயலிழந்துபோன அபிவிருத்தித் திட்டங்களின் செயற்பாடுகளை மாகாண ஆளுநர்களின் ஒருங்கிணைப்பின் கீழ் தொடரக்கூடிய முறையான பொறிமுறையை வகுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவுறுத்தியிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பரவலாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டநிதிகளின் மூலம் இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய ஐந்து வட மாகாண மாவட்டங்களில் அடுத்தவாரம் அபிவிருத்திக்கான கூட்டங் களை நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்த போதும் தேர்தல் ஆணையகத்தின் தலையீட்டினால் அது கைவிடப்பட்டது.

இந்தநிலையில், பாராளுமன்றத் தேர்தல் முடிந்ததும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லலாம் என மாவட்டச் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணையகத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். அதற்கு அரசியல் அல்லது உத்தியோகபூர்வ செல்வாக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆம் ஆண்டு 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01.12.1928

மறைவு
26.10.1994

திதி-22.10.2024



தோற்றம்
27.06.1930

மறைவு
12.11.2011

திதி-18.10.2024

அமரர்.
## சிதம்பரநாதர் இரத்தினசபாபதி

(அல்லைப்பிட்டி உப தபாலதிபர்,மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா, இலங்கைத் தமிழ்பேசும் உப தபாலதிபர் சங்கத் தலைவர், மரண விசாரணை அதிகாரி, சமாதான நீதவான்)

அமரர்.
## இரத்தினசபாபதி சிவயோகலட்சுமி

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!
உங்கள் அன்பு முகம் எங்கள் நெஞ்சங்களை விட்டு
அகல முடியாமல் வருந்தி வாழ்கின்றோம்.
இடையில் உங்கள் தர்மபத்தினியையும் உங்களுடன் அழைத்துவிட்டீர்கள்.
தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமும் இல்லை
நீங்கள் மறைந்து முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டது ஐயா
முப்பது ஆண்டுகள் என்ன முப்பதாயிரம் ஆண்டானாலும் எங்கள்
இதயங்களில் வீற்றிருக்கும் தெய்வமாகிவிட்டீர்கள் ஐயா
என்றும் மண்டைதீவு திருவெண்காட்டான் பாதத்திலும் அல்லைப்பிட்டி
இனிச்ச புளியடி முருகன் பாதத்திலும் இருந்து எங்களை ஆசீர்வதியுங்கள்.

எமது குடும்பத்தின் குலவிளக்குகளாக விளங்கிய எமது தந்தையார் அமரர். சிதம்பரநாதர் இரத்தினசபாபதி (அல்லைப்பிட்டி உப தபாலதிபர், மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா, இலங்கைத் தமிழ்பேசும் உப தபாலதிபர் சங்கத் தலைவர், சமாதான நீதவான், மரண விசாரணை அதிகாரி) அவர்களதும் எமது தாயார் அமரர். சிவயோகலட்சுமி இரத்தினசபாபதி அவர்களதும் முறையே 30 ஆம், 13 ஆம் ஆண்டுகளின் நினைவு நாளில் அவர்களின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், ஊரவர்கள், நண்பர்கள் ஆகியோர் அமரர்களது நினைவை நெஞ்சில் நிறுத்திப் போற்றி வணங்குகின்றோம்.

"சிவவாசம்", தபாற் கந்தோர் வீதி,
அல்லைப்பிட்டி - 2

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜிதஹேரத்தை சந்தித்த சியராலியோன் ஜனாதிபதி



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சியராலியோன் ஜனாதிபதி ஜூலியஸ் மடா பாவோவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சமோவாவில் நடைபெறவுள்ள பொது நலவாய' மாநாட்டில் பங்கேற்பதற்காக சியாராலியோன் ஜனாதிபதி நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந் திருந்தார்

அதன்படி நேற்றுக் காலை வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் சியரா லியோன் ஜனாதிபதி ஜூலியஸ் மடா பாவோ சந்தித்திருந்தார். (நி-8)

# ஊழல்வாதிகள் இல்லாத பாராளுமன்றை அனைவரும் இணைந்து உருவாக்குவோம்

## ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு

(கொழும்பு)

நவம்பர் 14 ஆம் திகதி மோசடி யாளர்கள் மற்றும் ஊழல்வாதிகள் இல்லாத சுத்தமான பாராளுமன்றத்தை உருவாக்கும் பெரும் முயற்சியில் அனை வரும் இணைந்து கொள்ளுமாறு ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக்க கேட்டுக் கொண்டார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங் கத்தின் கீழ் முழு அரச சேவையையும் டிஜிற்றல் மயமாக்குவதன் மூலம் பொதுச் சேவைகள் துரிதப்படுத்தப்படும் என ஜனாதிபதி வலியுறுத்தி னார்.

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண் டாவது பொதுக் கூட்டம் கட்டு நாயக்கவில் நடைபெற்றது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இது இடம் பெற்றது.

நாடு காட்டும் திசை காட்டியில் "நாம் ஒன்றாக செல் கிறோம்" என்ற தொனிப் பொருளில் பேரணி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

தூய்மையான அரசியலை அங்கீ கரிக்கும் மக்கள் மீண்டும் மீண்டும் நாட்டை கட்டியெழுப்பும் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குவார்கள் என அமைச் சர் விஜித ஹேரத் இங்கு தெரிவித்தார். (நி-8)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (402)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.


இந்தியா தொடர்புகளுக்கு : 0091956156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். சுவானி சின்னப்பூ

தோற்றம் 15.05.1945 — மறைவு 22.10.2021

என்றும் எமக்கு உறுதுணையாய்
நன்றாய் எம்மைக்
காத்திருந்த தந்தையே
மூன்றாண்டு சென்று விட்ட போதினும்
உங்கள் நினைவிலே
உருகி நிற்கின்றோம்

(C-1429)

புளியங்கூடல், சின்னமடு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர், பிள்ளைகள்
தொ.இல: 077 267 1713

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். முருகேசு மனோகரன்
தவப்பேறு 13.09.1935 — சிவப்பேறு 15.01.2023
திதி-தேய்பிறை அட்டமி

அமரர். மனோகரன் அரியமலர்
தவப்பேறு 06.12.1941 — சிவப்பேறு 23.10.2023
திதி-வளர்பிறை மகாநவமி

எங்கள் வீட்டின் குலவிளக்குகளே உங்கள் அன்பு ஒளி
குன்றேறிய தீபம் போல் என்றென்றும் மங்காது ஒளிர்ந்திடும்
இவ்வுலகை விட்டு நீங்கள் மறைந்தாலும் எங்கள் நெஞ்சில்
என்றென்றும் உங்கள் ஒளி வீசிடுமே.

(2668)

"கதிரமலைவாசம்", புலோலிமேற்கு, கிராமக்கோடு.

தகவல்– குடும்பத்தினர்.

# இராசிபலன்

22.10.2024
ஐப்பசி 05, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி முற்பகல் 8.20 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 11.58 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், சவால் களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப் பும் மரியாதையும் உயரும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** உடல் நலனில் கவனம் தேவை, ஒரு வகையில் சிக்கனமாக இருந்தா லும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்

**கடகம்** மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், வழிபாட் டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம் பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமா னம் பெருக வழியமைத் துக் கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** தொழிலில் புதிய திட் டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆடம்பரப் பொருட் களை வாங்கும் எண்ணம் உருவா கும், காலை நேரத்திலேயே கலகலப் பான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** உறவினர் வழியில் மன நிறைவான செய்தி யொன்று வந்து சேர லாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களை நிறைவு செய்வதில் கொஞ்சம் சிரமங்கள் ஏற்படலாம், வழிபாட் டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுற்றத் தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள்.

**மகரம்** வங்கிச் சேமிப்பை உயர்த் தும் எண்ணம் உருவா கும், பிரியமான சில ரின் சந்திப்பு இடம்பெறலாம், கனி வாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்த ப்பட்ட வகையில் நன்மை யுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி கள் வந்து சேரலாம், உறவினர்களின் அன்புத் தொடர்புகள் ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

ஆண்டவனை அடை[illegible]பாதை அன்புப் பாதையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துவிற்கு இரு பதக்கங்கள்





(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய் வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட பெண் களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி பி.அபிசாளினி 2.80 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கமும் குறித்த வயதுப் பிரிவில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சு.கஜானன் 4 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தை பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# யாழ். பல்கலையில் நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டின் கோதம் பேர்க் பல்கலைக்கழகத்திலே கல்வியாளராக இருக்கும் பேராசிரியர் பார்ட்க்லெம் எழுதிய "இறைமை பற்றிய அபிலாசைகளை நிகழ்த்திக் காட்டுதல். இலங்கையிலே தமிழர்களின் ஆயுதப் போராட்டமும் போருக்குப் பிந்தைய நிலை மாற்றமும்" எனும் நூல் பற்றிய அறிமுக நிகழ்வு நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

மொழியியல் ஆங்கிலத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்விலே நூலாசிரியர் பார்ட் க்லெம் எழுதிய நூல் பற்றிய தனது அறிமுக உரையினை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் முன்னாள் தலைவரும் சட்டத்தரணியுமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன் மற்றும் சமூகவியற் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோர் குறித்த நூல் பற்றிய தமது கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (6-8)

# இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவேந்தல் போதனாவில் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 68 பேரின் நினை வேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம், 22ஆம், திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்து மீறி உள்நுழைந்த இந்திய அமைதிப்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அத்தாக்குதல் சம்பவத்தில் வைத்தியசாலையில் கடமையில் இருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சிகிச்சை பெற்றுவந்த 47 நோயாளர்கள் என 68 பேர் படு கொலை செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## தேர்தல்களம்

# மாற்றம் எனக் கூறி ஏமாற்ற விரும்பவில்லை

'லாந்தர்' சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடும் நிஷாந்தன்



(யாழ்ப்பாணம்)

மாற்றம் என்று மக்களை ஏமாற்ற விரும்பவில்லை என யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக் குழு 21 இன் லாந்தர் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவைச் செயலாளர் எஸ். நிஷாந்தன் தெரிவித்தார்.

மாற்றத்திற்கான அரசியல் என்று மக்களிடம் வந்தவர்கள் தாங்களே மாறி மாறி நிற்பதைத்தான் மாற்றம் என்று கூறிவந்துள்ளார்கள்.

ஆகவே மாற வேண்டியவர்கள் அரசியல்வாதிகள் தானே தவிர மக்கள் அல்ல. இதுவரை காலமும் நடந்த எந்த தேர்தலாலும் எம் மக்களுக்கான எந்த மாற்றமும் நிகழவில்லை.

இவ்வாறான இந்தப் போக்கை மாற்ற வேண்டுமானால் தமிழ் மக்களின் கதவுகளை தட்டி தமிழ்த் தேசிய அரசியலையும், மக்களுக்கான இருப்பு அரசியலையும் செய்யவேண்டும். அவ்வாறானதொரு அரசியலை முன்னெடுக்கவே மக்களோடு மக்களாக இருந்த நாம் இன்று சுயேட்சையாக தேர்தல் அரசியலில் களமிறங்கி உள்ளோம் எனத் தெரிவித்தார். (6-8)

# ஜ.த.கூ.கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

ஜனநாயக தமிழரசு கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக கூட்டமானது நேற்று முன் தினம் வட்டுக்கோட்டை தொகு தியில் உள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கு ஏற்றி வைக் கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யுத்தத்தில் இன்னு யிர்களைத் தியாகம் செய்த உற வுகளுக்கு இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்ட பின்னர் கூட்டம் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து வேட்பாளர்கள் தமது அறிமுக விளக்க உரை களை ஆற்றினர். ஜன நாயக தமிழரசு கூட்டமைப்பின் மாம்பழச் சின் னத் தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான கே.வி. தவராசா, ஏனைய வேட்பாளர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.ஸ் வரபாதம் சரவணபவன், புவனேஸ்வரன் வசந், விமலேஷ்வரி சிறிகாந்தரூபன், குணாளன் கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் மூல வாக்களிப்பு 20,551 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக 759,210 அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதில் 20,551 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அஞ்சல் மூல விண்ணப்பங்களின் படி 738,659 பேர் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு ஐந்து நாட்கள் இடம்பெறவுள்ளன.

அதன்படி, பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்களில் இந்த மாதம் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 4ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதி வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (நி-8)


"மாற்றம்" என்று மக்களை "ஏமாற்ற" விரும்பவில்லை.



(007)

எஸ்.நிஷாந்தன் சுதேச மருத்துவர்

(முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர்)

செயலாளர் - தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை

சுயேட்சைக் குழு 21




## திரிபுபடுத்தப்பட்ட அறிக்கைகளை ஏற்க தயாரில்லை

### கர்தினால் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

2019 உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொது மக்களை தவறாக வழிநடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகள் தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்றில் உயிர்த்த ஞாயிறு குறித்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

புதிய அறிக்கைகளில் அரசாங்கத்தின் தற்போதைய அறிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசாங்கம் இந்த பரிந்துரைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நாங்கள் இந்த இரண்டு அறிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. தற்போதைய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார். அவர் அதனை நிறைவேற்றுவாரா என கத்தோலிக்க திருச்சபை பார்த்துக் கொண்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி-8)

# அடுத்த வருடம் முதல் புதிய திட்டங்கள்

## ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தத் திட்டங்களில் கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தற்போது நடைபெற்று வரும் திட்டங்களுக்கு தொடர்ந்தும் நிதி வழங்க தயாராக இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது. (நி-8)

## பண்டாரநாயக்க விமான நிலையத்தின் போலி முகப்புத்தகம்

### விமானசேவை நிறுவனம் தகவல்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள போலி முகப்புத்தம் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக விமான சேவை நிறுவனம் தகவல்கள் தெரிவித்துள்ளது.

இந்த முகப்புத்தக பக்கத்தின் ஊடாக உரிமை கோரப்படாத பொதிகள் விற்பனைக்கு இருப்பதாகக் கூறி தவறான தகவலைப் பதிவிட்டுள்ளதாகவும் அந் நிறுவனம் அறிவித்துள்ளது.

பல்வேறு பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுடன் கூடிய அந்த பொதிகளின் விலை 639 ரூபாயாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் எந்த வகையிலும் பயணப் பொருட்களை விற்பனை செய்யாது என அந்நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

மேலும் இதுபோன்ற மோசடிகளில் சிக்க வேண்டாம் என்றும் நிறுவனம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்: திருவோணம் 8 இல் செவ்
கிபா-27 3/4
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: Bsc, Software Development
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: B/14861

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம் :5'7"
தகைமை/தொழில்: Diploma in Accounting,Assistant Accountant (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14863

பிறப்பு:1994-இந்து
நட்சத் திரம்: ஆயிலியம்
கிபா-44
உயரம் :5'7"
தகைமை/தொழில்: BSc,IT Business Analyst
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14864

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம்
கி.பா: 36
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Accountant(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14896

பிறப்பு-2000-இந்து
நட்சத் திரம்: கார்த்திகை
கி.பா-36
உயரம் : 5'
தகைமை/தொழில்-AAT,Accountant (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/14898

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 7 இல் செவ்
கி.பா: 43 3/4
உயரம் :5'6"
தகைமை/தொழில்: Engineer (Newzealand)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/14826


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதல்

## மருத்துவர் உட்பட 7 தொழிலாளர்கள் உயிரிழப்பு



(டில்லி)

ஜம்மு காஷ்மீர், கந்தர்பால் மாவட்டத்தின் சோனாமார்க் பகுதியில் அமைந்துள்ள கட்டுமான தளத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் மருத்துவர் ஒருவரும் ஆறு புலம்பெயர் தொழிலாளர்களும் கொல்லப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்டுமானத்தில் இருக்கும் சுரங்கப்பாதைக்கு அருகில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அப்பகுதியை சுற்றி வளைத்த பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளுக்கு பதில் தாக்குதல் நடத்த பாரிய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (நி-8)

# சமையல்காரராக மாறிய ட்ரம்ப்

## வைரலாகும் வீடியோ



(வோஷிங்டன்)

அமெரிக்க உணவகமொன்றில் பிரென்ச் பிரைஸ் பொரித்து வாக்கு அறுவடையில் ஈடுபட்டார் டொனால்ட் ட்ரம்ப்.

கமலா ஹாரிசை விட தான் 15 நிமிடம் அதிகமாக மெக்டெனால்ட்ஸ் உணவகத்தில் உழைத்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.


அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் மற்றும் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் போட்டியிடு கின்றனர்.

இருவரும் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறனர். அந்த வகையில் இந்தியாவில் தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் கையாளும் பார்முலாவை ட்ரம்ப் கையில் எடுத்துள்ளார். அதாவது அமெரிக்க மக்களின் விருப்பத்துக்குரிய மெக்டொனால்ட்ஸ் உணவகத்தில் பிரென்ச் பிரைஸ் பொரித்து வாக்கு அறுவடையில் ஈடுபட்டுள்ளார்.

பென்சில்வேனியாவில் உள்ள மெக்டொனால்ட்ஸ் கிளை ஒன்றில் நேற்று முன்தினம் அவர் செஃப் உடை அணிந்து பிரென்ச் பிரைஸ் பொரிக்கும் வீடியோ வைரலாகி வருகிறது. கமலா ஹாரிசை விட தான் 15 நிமிடம் அதிகமாக மெக்டொனால்ட்ஸ் உணவகத்தில் உழைத்துள்ளேன் என்று ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.

கமலா ஹாரிஸ் தனது இளமைக்கால நடுதர வாழ்க்கை குறித்தும் மெக்டொனால்ட்ஸ் உணவகத்தில் பணியாற்றியது குறித்தும் பிரகாரங்களில் சிலாகித்து வருவதால் அதை கிண்டலடிக்கும் வகையில் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-8)





தென் கொரியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் அணு ஆயுத நாடு வட கொரியா. தற்போது ரஷ்யாவுடன் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நெருக்கம் காட்டி வருவது நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது.

யாகவு
செய்யப
ஆயுத
செய்கிற
வழக்கு
லைபன
வருவத
பெரும்
இதற்
நகரின்
ஹிஸ்பு
தலைவ
இராணு
தாக்குத
எல்ஹ
அப்பால
ஹசின்
மே
செயற்ப
ஒன்று
இந்த
புல்லா
ஏவியு
தொடர
பகுதிய
அதனை
தீயணை
னர்..

# பிரிக்ஸ் மாநாட்டில் பிரேசில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார்



(பிரேசிலியா)

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் ஒன்றிணைத்து உருவாக்கிய அமைப்பு பிரிக்ஸ் கூட்டமைப்பு. இது கடந்த 2009 ஆம் ஆண்டில் உருவான ஒரு அமைப்பாகும். இதில் 2010 இல் தென்னாபிரிக்கா இணைந்து கொண்டது.

கடந்த ஜனவரி 2024 இல் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்டவையும் இந்த அமைப்பில் இணைய இசைவு தெரிவித்துள்ளன.

ரஷ்யாவின் காசான் பகுதியில் இன்றும் நாளையும் பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு நடக்க உள்ளது. இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார் எனத் தகவல் வெளியானது.

அங்கு உக்ரைன் போர் நிறுத்தம் குறித்து பேசுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இந்நிலையில், பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க மாட்டார் என அந்நாட்டு வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

காயம் காரணமாக பிரேசில் ஜனாதிபதி பங்கேற்க மாட்டார். வீடியோ கான்பரன்ஸ் மூலம் மாநாட்டில் பங்கேற்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (நி-8)

# சீர்குலையும் பொருளாதாரம் இஸ்ரேல் கிடுக்குப்பிடி



(ஜெருசலேம்)

பாலஸ்தீனம் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் தற்போது லெபனான் மீதும் தொடர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. லெபனானில் செயற்பட்டுவரும் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீதும் தாக்குதலை தொடர்கிறது. ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டதன் எதிரொலியாக வடக்கு இஸ்ரேலில் செசாரியா பகுதியில் உள்ள பிரதமர் நெதன்யாகு வீட்டை குறிவைத்து ஹிஸ்புல்லா ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

இதில் உயர் தப்பிய நெதன்யாகு ஹிஸ்புல்லாவை அழித்தொழிக்க சூளுரை செய்துள்ளார். அதன்படி லெபனான் தலைநகர் பெய்ரூட் மற்றும் பிற பகுதிகளில் உள்ள ஹிஸ்புல்லாவுக்கு பணபலம் கொடுக்கும் அல் குவார்த் அல்ஹசன் என்ற பொருளாதாரப் பிரிவு உள்ளிட்ட முக்கிய இலக்குகளை தாக்க உள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. எனவே அந்த இலக்குகளுக்கு அருகில் உள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறும்படி இஸ்ரேல் அறிவுறுத்தியுள்ளது.

அல் குவார்த் அல் ஹசன் மூலமே ஹிஸ்புல்லாவுக்கு ஈரானிடம் இருந்தும் மக்கள் நன்கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரமடையும் போர்!

# 12 ஆயிரம் வீரர்களை ரஷ்யாவிற்கு அனுப்பிய வடகொரியா

## சிக்கிய ஆதாரங்கள்: அலேர்ட்டான ஜெலன்ஸ்கி





**(சியோல்)**

**தங்கள் நாட்டு இராணுவ வீரர்கள் 12 ஆயிரம் பேரை வட கொரியா அனுப்பியிருப்பதை தென் கொரிய உளவு அமைப்பு கண்டறிந்துள்ளது. இந்த வீடியோவை உக்ரைன் உளவுப் பிரிவு உறுதி செய்துள்ளது.**

வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதால் பொருளாதார பாதிப்பை சந்தித்து இருக்கும் வடகொரியாவுக்கு எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள்ஆதரவு அளிக்கின்றன,

இதற்கிடையே சமீபத்தில் தென் கொரியாவை எதிரி நாடாக அதிகாரபூர்வமாக அறிவித்த வட கொரியா அமெரிக்காவுக்கு அணு ஆயுத மிரட்டல் விடுத்திருந்தது.

இந்நிலையில் மேற்கு நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் எதிராக மறைமுகமாக கடந்த 2 வருடங்களாக நடந்துவரும் உக்ரைன் போரில் வட கொரியா பங்கேற்றுள்ளதாக தகவல்கள் மட்டுமின்றி அதற்கான ஆதாரங்களும் கிடைத்து வருகின் றன. அதாவது, உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு உதவும் விதமாக தங்கள் நாட்டு இராணுவ வீரர்கள் 12 ஆயிரம் பேரை வடகொரியா அனுப்பியிருப்பதை தென் கொரிய உளவு அமைப்பு கண்டறிந்துள்ளது.

இது குறித்து வட கொரியாவும் ரஷ்யாவும் எதுவும் பேசாத நிலையில் டசின் கணக்கான வட கொரிய வீரர்கள் ரஷ்ய இராணுவத் தளத்தில் பயிற்சி எடுத்து சோர்ந்து ஓய்வு எடுப்பது, ரஷ்ய இராணுவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்வது உள்ளிட்ட காட்சிகள் அடங்கிய வீடியோவும் வெளியாகி உள்ளது.

இந்த வீடியோவை உக் ரைன் உளவுப் பிரிவும் கண் டறிந்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உறுதிப்படுத்தியுள்ளார்.

எனவே உக்ரைன் ரஷ்யா போர் மேலும் தீவிர மடையும் என்று அஞ்சப்படுகிறது. இதற்கிடையே சமீபத்தில் நடந்த தாக்குதலுக்கு பதிலடியாக ரஷ்யா மீது 100 ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது உக்ரைன். மேலும் ரஷ்யாவின் 2 ஆயுத தயாரிப்பு மையங்களும் தாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-8)

---

யாகவும் வரும் பணம் பரிவர்த்தனை செய்யபடுகிறது. இதன்மூலமே தங்களின் ஆயுத தேவைகளை ஹிஸ் புல்லா பூர்த்தி செய்கிறது. குறிப்பாக இந்த அல் குவார்த் வழக்கும் பொருளாதார சேவைகளை பல லெபனானிய மக்களும் பயன்படுத்தி வருவதால் இதன் மீதான தாக்குதல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

இதற்கிடையே லெபனானின் பெய்ரூட் நகரின் தெற்கு பகுதியில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் உளவுப்பிரிவு தலைமையகத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் தற்போது நடத்திய தாக்குதலில், அதன் முக்கிய அதிகாரிகள் எல்ஹாக் அப்பாஸ் சலாமே, ராச்சா அப்பாஸ் இச்சா மற்றும் அகமது அலி ஹசின் ஆகிய 3 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் நிலத்திற்கு அடியில் செயற்பட்டு வந்த ஆயுதத் தொழிற்சாலை ஒன்றும் சேதமடைந்தது. இஸ்ரேலின் இந்த தாக்கு தலுக்கு, பதிலடியாக ஹிஸ் புல்லா அமைப்பு 100 ரொக் கெட்டுகளை ஏவியுள்ளது. அடுத்தடுத்து நடந்த இந்த தொடர் தாக்குதலால் வடக்கு இஸ்ரேல் பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டு உள்ளது. அதனை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு உள்ளனர்.. (நி-8)

---

# இந்தோனேஷியா ஜனாதிபதியாக பதவியேற்றார் சுபியாண்டோ



(ஜகார்த்தா )

இந்தோனேஷியாவின் எட்டாவது ஜனாதிபதியாக இராணுவ முன்னாள் அமைச்சர் பிரபோவோ சுபியாண்டோ நேற்று முன் தினம் பதவியேற்றார்.

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவில் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் கடந்த பெப்ரவரியில் நடந்தது. இதில் இராணுவ முன்னாள் அமைச்சரான பிரபோவோ சுபியாண்டோ அபார வெற்றி பெற்றார்.

இதைத் தொடர்ந்து, அவர் நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பதவியேற்றார். சீனா, அமெரிக்கா உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

பொருளாதாரத்திலும், செல்வசெழிப்பிலும் கொழிக்கும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஜோகோ விடோடோ, மக்களிடையே மிகவும் பிரபலமானவர். அவரை எதிர்த்து 2014 மற்றும் 2019 தேர்தல்களில் போட்டியிட்டார் சுபியாண்டோ.

அந்தத் தேர்தல்களின் முடிவுகளை ஏற்க மறுத்து ஜனாதிபதியாக விடோடோ தொடர்ந்தார். அதே நேரத்தில், சுபியாண்டோவை தன் இராணுவ அமைச்சராக 2019 இல் அவர் நியமித்தார்.

முன்னாள் இராணுவ ஜெனரலான சுபியாண்டோ, அரசியல் ரீதியில் விடோடோவுடன் மோதல் போக்குடனேயே இருந்து வந்தார். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரித்தது.

இந்த ஆண்டு நடந்த தேர்தலில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவராக இருந்த போதும் சுபியாண் டோவை தன் அரசியல் வாரிசாக விடோடோ அறிவித்தார்.

இதையடுத்தே ஜனாதிபதித் தேர்தலில் சுபியாண்டோ பெரும் வெற்றி பெற்றார். இராணுவத்தில் இருந்த போது அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக அதில் இருந்து 1998 இல் நீக்கப்பட்டார். அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்றவை தங்கள் நாட்டுக்குள் சுபியாண்டோ நுழைவதற்கு தடை விதித்திருந்தன.

இந்தோனேஷியாவில் வழக்கு தொடரப்பட்டதால், ஜோர்டானில் தஞ்சமடைந்தார். ஒருநாள் கூட விசாரணைக்கு ஆஜராகாமல், இந்த வழக்குகளில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி மூலம் பணமோசடி

## எச்சரிக்கும் பொலிஸார்

**(கொழும்பு)**

**நாடளாவிய ரீதியில் போலி தொலைபேசி அழைப்புகள் மூலம் பண மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இலங்கை போக்குவரத்து சபையின் பல்வேறு பகுதிகளில் உள்ள 9 டிப்போக்களுக்கு போலி தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த டிப்போக்களின் முகாமையாளர், சிரேஷ்ட அதிகாரி அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஏதோ ஒரு இடத்தில் திடீர் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளன.

அதன் பின்னர் குறித்த தரப்பினர் தாங்கள் வந்த வாகனத்தை சீர் செய்ய Ez cash மூலம் அவசர தொகையாக 10,000 ரூபாயை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. மேலும் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு வந்துள்ளதாகவும் சில இடங்களில் பணம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.சில சமயங்களில் தொலை பேசி அழைப்புகளை மேற்கொள்பவர்கள் வாகனம் திருத்துமிட உரிமையாளர்கள் அல்லது குறித்த இடத்திற்கு வந்த பொலிஸ் உத்தி யோகத்தர்கள் அல்லது வேறு சில குறிப்பிட்ட நபர்களாக இருந்து திட்டமிட்டு இந்த பண மோசடிகளை செய்வதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த தொலை பேசி எண்கள் குறித்து விசாரணை நடத்திய போது, பல சந்தர்ப்பங்களில் அந்த எண்கள் இறந்த நபர்கள் அல்லது வெளிநாட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட சிம் அட்டை இருப்பதும் தெரியவந்துள்ளது.

இவர்கள் பெரும்பாலும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் அல்லது சில போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.எனவே, இவ்வாறான தொலைபேசி அழைப்பு வந்தால் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் மக்களைத் தொடர்பு கொண்டு, அழைப்பின் உண்மை மற்றும் பொய்யை சரிபார்த்துக் கொள்ளுமாறும் இவ்வாறான மோசடிச் செயல்களில் சிக்காமல் இருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 240 | 220 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 350 |
| தக்காளி | 350 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 260 | 200 | 160 |
| கோவா | 300 | 250 | 220 | 250 |
| கரட் | 180 | 200 | 180 | 250 |
| பூசணி | 260 | 60 | 100 | 120 |
| புடோல் | 80 | 200 | 100 | 320 |
| வாழைக்காய் | 180 | 140 | 120 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 280 | 300 | 350 |
| பாகற்காய் | 600 | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 450 | 250 | 250 | 300 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 700 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 300 | 400 |
| போஞ்சி | 350 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 220 | 120 | 220 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 60 | 120 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 200 | 140 | 120-170 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 500 | 600 | 500 |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 160 | 150 |

# இன்று ஒரு தகவல் 247



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனிதனும் பொம்மையும்

இந்த உலகத்திலே எப்படி வாழ்வது? என்று தெரியவில்லை சார்! உங்களுக்கு ஏதாவது வழி தெரிந்தால் சொல்லுங்களேன்! என்று மிகவும் சுலபமாக கேட்டுவிட்டார் ஒருவர். வழி சொல்லுங்கள் என்று கேட்கிறாரே. இது என்ன வடக்கே போ, தெற்கே போ என்று சொல்லுகின்ற விடயமா?

நான் யோசித்தேன். சரி என்னோடு வாருங்கள் என்று சொல்லி அவரை ஒரு சேர்ச்சுக்கு கூட்டிக் கொண்டு போனேன். அங்கே ஒரு பாதர் மக்களுக்கு நல்ல வழிகளைச் சொல்லிக் கொண்டு இருந்தார்.

அவர் சொன்ன ஒரு சின்னக் கதையிலே இவர் என்னிடம் கேட்ட கேள்விக்கான பதில் இருந்தது. இது தான் சார். உங்கள் கேள்விக்கு விளக்கம் . என்னை விட்டு விடுங்கள் என்று சொல்லி அவரிடம் இருந்து தப்பித்தேன்.

இந்த உலகத்திலே எப்படி வாழ்வது? என்ற கேள்விக்கு எங்களுக்கு அங்கே கிடைத்த விளக்கத்தை இப்போது உங்களிடமும் சொல்கின்றேன்.

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் மக்களுக்கு நல்ல வழிகளை எல்லாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்தாராம். எல்லோரையும் கூப்பிட்டு ஒரு இடத்திலே உட்கார வைத்து சில செயல் விளக்கம் எல்லாம் செய்து காட்டினாராம். ஒரு நாள் அப்படி தான் ஒரு கூட்டத்திலே அவர் பேசிக் கொண்டு இருந்தார். அவருக்கு எதிரிலே மேசை மேலே மூன்று கண்ணாடிப் பாத்திரம். அதிலே சுத்தமான தண்ணீர் மிகத்தெளிவாக இருக்கிறது.

அதே மேசையிலே இன்னொரு பக்கத்திலே மூன்று மனிதப் பொம்மைகள். மூன்று பொம்மையும் மனித உருவம் தான். இருந்தாலும் அதிலே ஒரு வித்தியாசம். அது என்ன என்றால்? ஒரு பொம்மை களிமண்ணினாலே செய்தது, ஒருபொம்மை பஞ்சாலே செய்தது, இன்னொன்று சர்க்கரையாலே செய்தது. உருவம் ஒரே மாதிரி இருந்தாலும் அதன் உள்ளே இருக்கிறது வேறு மாதிரி இருந்தது.

இப்போது அந்தப் பெரியவர் என்ன செய்தார் தெரிமா? முதலில் களிமண் பொம்மையை கையிலே எடுத்தார். ஒரு கண்ணாடி பாத்திரத்திலே அதைப்போட்டார்.

அதன் பின்பு பஞ்சுப் பொம்மையை எடுத்தார். அதை ஒரு பாத்திரத்திலே போட்டார். அதற்கு பின் சக்கரை பொம்மையை எடுத்தார். அதை இன்னொரு பாத்திரத்திலே போட்டார். ஆக மூன்று பொம்மைகளையும் எடுத்து மூன்று பாத்திரத்திலேயும் உள்ள தெளிவான தண்ணீரிலே போட்டு விட்டார்.

எதிரிலே உட்கார்ந்து இருந்த மக்களைப்பார்த்து இப்போது இதை எல்லோரும் நன்றாகக் கவனியுங்கள் என்றார். கவனித்தார்கள். என்ன நடக்கிறது இப்போது? என்று கேட்டார்.

களிமண் பொம்மையைப் போட்டார் அல்லவா. அந்தப் பொம்மை தண்ணீரிலே கரைந்தது. தண்ணீர் முழுவதும் கலங்கலாக சேறாக ஆகிவிட்டது.

பஞ்சு பொம்மையைப் போட்டார் அல்லவா அந்த பொம்மை பாத்திரத்திலே உள்ள தண்ணீர் முழுவதையும் தனக்குள்ளே உறிஞ்சிக் கொண்டது.

சர்க்கரை பொம்மையைப் போட்டார் அல்லவா? அங்கே என்ன ஆகிவிட்டது என்றால் இந்தப் பொம்மை அந்தத் தண்ணீரிலே கரைந்து தண்ணீரோடு தண்ணீராகவே ஆகிவிட்டது.

இந்த மூன்று பொம்மைகளையும் பார்த்தீர்களா? இந்த மூன்றும் மூன்று வகை மனிதர்களுக்கு உதாரணம்.

களிமண் பொம்மை மாதிரி உள்ள மனிதர்கள் இந்த சமூகம் என்கின்ற தண்ணீரிலே கலக்கும் போது அவர்களும் கரைந்து விடுவார்கள். சமூகத்தையும் கலக்கி சேறாக்கி விடுவார்கள்.

பஞ்சு பொம்மை மாதிரி உள்ளவர்கள் சுய நலவாதிகள். சுற்றி இருப்பதை எல்லாம் தனக்கு உபயோகப்படவேண்டும் என்று நினைத்து உறிஞ்சுவார்கள்.

சர்க்கரை பொம்மை மாதிரி உள்ளவர்கள் சமூகத்திற்காக தன்னையே கரைத்துக் கொள்வதற்கு தயாராக இருக்கிறவர்கள். இவர்களாலே சமூகம் முழுவதும் இனிப்பாக இருக்கும்.

ஆக இந்த உலகத்திலே எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் . சர்க்கரை பொம்மை மாதிரி வாழவேண்டும். அது தான் அந்தப் பெரியவர் நமக்குச் சொல்லுகின்ற விளக்கம்.

இது மாதிரி நான் செயல் விளக்கம் செய்தேன்.

ஒரு நாள் விடியற் காலையிலே ஒரு நண்பர் வீட்டுக்குப் போனேன். வாக் போற வழியிலே அவர் வீடு. அதனாலே அப்பப்ப போவது வழக்கம்.


அந்த நேரம் அவர் தேநீர் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார். என்னைப் பார்த்ததும் எனக்கும் ஒரு தேநீர் வந்தது வழக்கம் போல!

பக்கத்திலே சர்க்கரை தனியாக வைத்திருந்தார்கள். நான் ஒரு ஸ்பூன் சர்க்கரையை எடுத்து தேநீரிலே போட்டுக் கலக்கினேன். சர்க்கரை கரைந்து விட்டது. உடனே பேச ஆரம்பித்தேன்.பாருங்க சார் ஒரு ஸ்பூன் சர்க்கரை தான் இருந்தாலும் அது ஒரு டம்ளர் தேநீரிலே தன்னைக் கரைத்து தியாகம் செய்து கொண்டது. தேநீர் முழுவதும் இனிப்பாகி விட்டது. இதிலேயிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டேன்.

அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.இனிமேல் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து சேருவதற்குள்ளே தேநீரை சாப்பிட்டு முடித்து விட வேண்டும் என்று நினைக்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்களிப்பு தொடர்பிலான செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் அலுவலர்களுக்கான செயலமர்வானது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், தபால் மூலமான வாக்களிப்பிற்கான வாக்குச்சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்களை பொதியிட்டு விநியோகிக்கும் கடமையானது ஒரு குழுக்கடமையாகும் என்பதால் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் வினைத்திறமையாக செயற்பட்டு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளரினால் விளக்கமளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் கடமையில் ஈடுபடவுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (33-6-8)

# புதையல் அகழ்வு சந்தேக நபர் கைது

(குருநாகல்)

குருநாகல், மெல்சிறிபுர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஹெவன தென்ன பிரதேசத்தில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மெல்சிறிபுர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த கைது சம்பவம் இடம் பெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து, புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள், 4 ஜெலட்நைட் குச்சிகள், 6 டெட்டனேட்டர் மற்றும் இரசாயனப் பொருட்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# மன்னார் பாலத்தடியில் கடற்கரை பூங்கா
## அங்குரார்ப்பணம்




(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் நீண்டகாலமாக இராணுவ சோதனை சாவடி அமைந்து காணப்பட்ட பகுதியில் கடற்கரை பூங்கா அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் இடம் பெற்றது.

நீண்ட நாட்களாக பிரதான பாலத்துக்கு அருகில் இராணுவ சோதனை சாவடி மற்றும் இராணுவ முகாம் வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த இராணுவ சோதனை சாவடி அகற்றப்பட்டு குறித்த காணி மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், நகர சபை செயலாளர்கள், நகரசபை ஊழியர்கள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டனர். (6-8-285)



யாழ். போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட உறவுகளது 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது உயிர்நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# இரத்ததான முகாம்

(முல்லைத்தீவு)

"உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம், மனிதத்தால் மனிதர்களை வாழ வைப்போம்" எனும் தொனிப்பொருள் மு/மல்லாவி மத்திய கல்லூரி நடத்தும் இரத்ததான முகாம் நாளை காலை 9 மணி-பிற்பகல் 1.30 மணி வரை மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்களை இரத்ததான முகாமில் கலந்து கொண்டு குருதித் தானம் செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# மோ.வண்டி-சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(தருமபுரம்)

கிளிநொச்சி ஏ9 வீதி மத்திய ஆரம்ப வித்தியாலயம் முன்பாக நேற்று அதிகாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கிளிநொச்சி பகுதியில் இருந்து முறிகண்டி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் வீதியினை கடக்க முற்பட்ட வேளை இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ் விபத்தில் காயம் அடைந்த இருவரையும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-316)

# வவுனியாவில் கால்வாய்கள் தூர்வாரும் பணி முன்னெடுப்பு




(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நிலவும் மழையுடனான கால நிலை காரணமாக டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

வவுனியா நகரின் பெரும்பாலான கால்வாய்கள் குப்பைகளால் மூடப்பட்டுள்ளமையால் மழை நீர் முறையாக செல்லாமையும் டெங்கு பரவுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

இதன் மற்றுமொரு கட்டமாக வவுனியா நகரில் உள்ள வடிகால் அமைப்பை சுத்தம் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (6-8)

# நாட்டை மீட்பது யார்? மக்களே தீர்மானிக்க வேண்டும்
## சஜித் பிரேமதாச

(கொழும்பு)

'வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பது யார் என்பதை எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்களே தீர்மானிக்க வேண்டும்' என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ரத்மலானையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ளதாவது 'வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கக்கூடிய திறன் ஐக்கிய மக்கள் சக்தியிடமே உள்ளது. சிறந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் எமது கட்சியிலேயே அங்கம் வகிக்கின்றனர்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற கடனை



இன்னும் 4 வருடங்களில் நாம் செலுத்த வேண்டும் எனவும், அந்த இலக்கினை நாம் அடையாவிட்டால் நாம் மீண்டும் பாரிய நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்' என தெரிவித்தார். (6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 612





கட்டாயம் நிறைவேறியே தீரும். அது இவள் மனத்தில் உள்ள சபலம் அன்று. என்னுடைய மனோரதம் நான் செய்து இருக்கும் தீர்மானம். "தங்கள் தீர்மானமாயினும் இந்த விடயத்தில் நிறைவேறாது."

"ஏன் மீண்டும் அவ்விதம் சொல்கிறீர்? இளவரசர் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் பத்திரமாயிருக்கிறார் என்று சற்று முன் நீ கூறியது உண்மை தானே?"

'ஆகா! இது என்ன இன்பமான செய்தி? இளவரசர் பத்திரமாயிருக்கிறாரா? நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருக்கிறாரா? இந்தச் செய்தியைக் கேட்க இந்தச் செவிகள் கொடுத்து வைத்திருந்தனவே? ஓடை நீரில் முழுகிச் சாகாமல் நான் உயிர் பிழைத்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! இளைய பிராட்டிக்கு எத்தனையோ விதத்தில் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். இதுவும் ஒன்று இப்போது சேர்ந்தது.'

'ஆனால் ஐயோ! இது என்ன மேலே இவர் சொல்லும் செய்தி? செவியில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருக்கிறதே!'

"அம்மணி! இளவரசர் பத்திரமாயிருக்கிறார் என்பது உண்மைதான். அதனால் இவளுடைய ஆசை நிறைவேறும் என்பது என்ன நிச்சயம்? இளவரசர் இந்தப் பெண்ணை மணந்து கொள்ளமாட்டார் என்று நான் நினைக்கிறேன்."

"நீர் எதை வேணுமானாலும் நினைக்கலாம். இந்த உலகில் நான் இட்ட கோட்டைத் தாண்டாமல், என் பேச்சைத் தட்டாமல் நிறைவேற்றக்கூடிய ஓர் ஆண்மகன் இருக்கிறான். அவன்தான் என் தம்பி அருள்மொழிவர்மன்!" இளவரசி! அத்தகையவன் நானும் ஒருவன் இருக்கிறேன்."

"பின்னர் என்ன எனக்குக் குறைவு? என்னுடைய எண்ணம் நிறைவேறுவதற்கு என்ன தடை? பழுவேட்டரையர்கள் இதற்குக்கூடக் குறுக்கே வருவார்களா என்ன?"

"அது எனக்குத் தெரியாது. தங்களிடம் இளவரசருக்கு எல்லையற்ற அன்பு உண்டு என்பதை நான் அறிந்திருக்கிறேன். வேறு எந்தக் காரியத்திலும் தங்கள் வார்த்தையைக் கேட்பார். அவருக்கு இராஜ்யம் ஆளுவதில் சிறிதும் இஷ்டமில்லை.

என் கண் முன்னால் இலங்கை மணி மகுடத்தை வேண்டாம் என்று மறுத்தார். ஆயினும் தாங்கள் வற்புறுத்தினால் இராஜ்யம் ஆளுவதற்குக் கூடச் சம்மதிப்பார். ஆனால் இந்தப் பெண்ணை மணப்பதற்கு"

"சம்மதிக்க மாட்டான் என்றா சொல்கிறீர்? அவ்விதம் என் அருமை தோழியை நிராகரிப்பதற்கு அவன் இவளிடம் என்ன குறையைக் கண்டான்? நீர்தான் என்ன கண்டீர்?"

"அம்மணி! நான் இந்தப் பெண்ணிடம் ஒரு குறையும் காணவில்லை. கண்டாலும் நம்ப மாட்டேன். இளைய பிராட்டி அரண்மனையில் பணி செய்யும் எல்லோரிலும் கீழான சேடிப் பெண்ணும் எனக்குத் தேவ கன்னிகை தான். இளைய பிராட்டியின் தோட்டத்தில் வாழும் முயற்குட்டி என் கண்களுக்குத் தேவேந்திரனுடைய ஐராவதத்துக்கும் மேலானதாகத் தோன்றும். இளவரசரும் இந்தப் பெண்ணிடம் குறை ஒன்றையும் காணவில்லை. ஆனால் அவருடைய மனது வேறொரு பெண்ணிடம் சென்றிருக்கலாம் அல்லவா?" ஐயோ! எவ்வளவு கொடுமையான வார்த்தைகள்! இந்த வாலிபர் எதற்காக இவ்விதம் நம்முடைய புண் பட்ட உள்ளத்தில் வேலை எடுத்துக் குத்துகிறார்?'

(தொடரும்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
வலி வடக்கு புத்தூர் பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## ஓநாயின் வயிற்றில் ஆட்டுக் குட்டிகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

"அம்மா கதவு இடைவெளி வழியாக உன் காலை நீட்டு நாங்கள் பார்த்துவிட்டுக் கதவைத் திறக்கிறோம் என்றன குட்டி ஆடுகள். தன் கால்களில் ஒன்றை நீட்டியது ஓநாய். அதைப்பார்த்த ஆட்டுக் குட்டிகள் நடுங்கின. தான் அம்மா இல்லை என்று தெரிந்து விட்டதே என்று கோபம் கொண்டது ஓநாய். ஊருக்குள் ஓடி அது சாயக்கடைக்குள் சென்று கறுப்புச் சாயத்தினைப் பூசிக் கொண்டது. மீண்டும் அங்கு வந்து அது கதவைத் தட்டியது. "அன்புக் குழந்தைகளே! கதவைத் திறந்து விடுங்கள் என்று மென்மையாகப் பேசியது. கறுப்புச் சாயம் பூசிய தன் காலை உள்ளே நீட்டியது. அம்மா! வாருங்கள்! அந்தக் கொடிய ஓநாய் இரண்டு முறை எங்களை ஏமாற்ற முயன்றது.

நாங்கள் ஏமாறவில்லை என்று மகிழ்ச்சியுடன் கத்திய ஆட்டுக் குட்டி கதவைத் திறந்தது. தனது கொடிய பற்களைத் காட்டியபடி ஓநாய் உள்ளே நுழைந்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டிகள் பயந்து அலறிஅடித்து ஒவ்வொரு இடமாக ஒழிந்து இருந்தன. ஒரு ஆட்டுக்குட்டி. மேசைக்கு கீழும் அடுத்த ஆட்டுக் குட்டி கட்டிலுக்கு கீழும் இன்னொரு ஆட்டுக் குட்டி அடுப்படியிலும் ஜன்னலுக்கு அருகிலும் கடிகாரத்திற்குள், நாற்காலிக் கடியிலும் மறைந்து கொண்டது. ஓநாய் ஒவ்வொரு இடமாகத் தேடிச் சென்று ஆறு ஆட்டுக்குட்டிகளை விழுங்கியது. கடிகாரத்துக்குள் ஒழிந்த ஆட்டுக்குட்டியை மாத்திரம் விழுங்க வயிற்றில் இடமில்லாத படியினாலும் அது ஒழிந்து இருப்பது தெரியாத படியினாலும் அது வெளியே நடக்க முடியாமல் மெல்ல மெல்ல நடந்து சென்று ஒரு மரத்தடியின் கீழ் படுத்து உறங்கியது. சிறிது நேரம் கழித்து தாய் ஆடு வீடு திரும்பி வந்தது. அப்பொழுது வீட்டுக்கதவு திறந்து இருப் பதை கண்டு திகைத்து தனது குட்டிகளுக்கு என்ன நடந்தது என்று பதறிப் பார்த்தது.

அப்பொழுது ஏழாவது ஆட்டுக்குட்டி ஓடி வந்து தனது தாய்க்கு நடந்ததைக் கூறியது. அப்பொழுது தாய் ஆட்டுக்கு கோபம் வந்து தனது ஆட்டுக்குட்டிகளை விழுங்கிய ஓநாயினை பழிவாங்குவதற்கு சென்ற தாயினை குட்டியும் தொடர்ந்தது. மரத்தடியின் கீழ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஓநாயினைப் பார்த்தது. அப்பொழுது ஓநாயின் வைத்தில் குட்டிகள் அசைவை அவதானித்த தாய் ஆடு, வீடுசென்று ரம்பத்தையும் ஊசியையும் நூலையும் எடுத்துச் சென்றது. ஓநாய் இருந்த இடத்திற்குச் சென்று ரம்பத்தால் வயிற்றை வெட்டி குட்டிகளை வெளியில் எடுத்தது எல்லா ஆட்டுக்குட்டிகளும் உயிருடன் இருந்தன.



அப்பொழுது தாய் ஆடு நினைத்தது தனது ஆட்டுக் குட்டிகளை முழுமையாக விழுங்கிய படியினால் எனது குட்டிகள் உயிருடன் இருந்தன என எண்ணியது. மகிழ்ச்சியுடன் ஆட்டுக்குட்டிகளைப் பார்த்துக் கூறியது உங்கள் எடை அளவில் ஒவ்வொருவரும் கற்களை கொண்டு வாருங்கள். ஓநாய் எழும்பினால் எங்களை சும்மா விடாது என்று சொன்னது அப்பொழுது குட்டிகள் கற்களை கொண்டு வந்து கொடுக்க வயிற்றினுள் கற்களை வைத்து தைத்து விட்டு நாங்கள் ஒரு புதருக்குள் ஒளிந்து இருந்து ஓநாய் என்ன செய்கின்றது என்று பார்ப்போம். ஓநாய் சிறிது நேரம் சென்றதம் எழுந்து தண்ணீர் குடிப்பதற்காக ஆற்றங் கரைக்குச் சென்றது. ஓநாயின் வயிற்றினுள் இருக்கும் கற்கள் ஓநாயினை நடக்க விடாமல் அங்கும் இங்குமாக உருண்டு புரண்டது. அப்பொழுது ஓநாய் ஆட்டுக் குட்டிகளே! ஏன் பாறைகள் மோதுவது போல மோதுகிறீர்கள்? என் வயிறு வலிக் கின்றது. மெதுவாக மோதுங்கள் என கூறி நடந்தது. இதனால் நிற்க முடியவில்லை தண்ணீர் குடிப்பதற்கு குனிய கற்கள் முன்புறமாக வந்தது. அதனால் ஓநாய் ஆற்றினுள் விழுந்தது. கற்கள் உள்ளே தாக்கத் தொடங்கியது. இத னால் ஓநாய் நீரினில் மூழ்கி இறந்து விட்டது இதனை கண்ட ஆடும் குட்டிகளும் மகிழ்ச்சியாக வீடுதிரும்பி நிம்மதியாக வாழ்ந்து வந்தன.

(முற்றும்.)

சு.நிதுஷனா, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் சிந்தனைகளின் பலனே நம் வாழ்வின் தற்போதைய நிலை. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மன்னார் மறை மாவட்ட ஆயருக்கு ஓர் அவசர மடல்

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களுக்கு அன்பு வணக்கம்.

நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் அறிக்கை ஒன்றை தாங்கள் வெளியிட்டிருந்தீர்கள்.

அந்த அறிக்கையில், எமது அரசியல் உரிமையை வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே வாக்களியுங்கள் என்று குறிப்பிட்டிருந்தீர்கள்.

அதாவது, தற்போது பொருளாதார வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கின்ற இவ்வேளையில்; அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல், நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளைப் பாராளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக் கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என உங்கள் கருத்தைப் பதிவு செய்துள்ளீர்கள்.

உண்மை. உங்கள் கருத்தில் எந்தவித எதிர்வாதமும் எமக்கு இல்லை.

ஆனால் எமது உரிமையை பாராளுமன்றம் ஊடாகப் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்கு வாக்களியுங்கள் என்று நீங்கள் கூறியிருப்பதனூடு, எமது உரிமையை வென்றெடுக்கக்கூடியவர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்ற பொருள் தெரிகிறது.

உண்மையில் எமது உரிமைப் போராட்டம் என்பது 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துவிட்டது.

இதை இன்னும் ஒருபடி விரித்துக் கூறுவதாயின், எமது உரிமைப் போராட்டம் வலுவிழந்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இதை நாம் கூறுவதற்குக் காரணம், மண் மீட்புப் போருக்குப் பின்னர் கடந்த பதினைந்து வருடங்களாக நம் தமிழ் அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்துக்குச் சென்று வருகிறார்கள்.

ஆனால் அவர்களால் ஏதேனும் தமிழ் மக்களுக்கு ஆகியதா? என்றால் இல்லவே இல்லை.

சிலவேளை இவர்கள் பாராளுமன்றத்துக்குச் செல்லாமல் இருந்திருந்தால், சிங்களத் தரப்புகள் எங்கள் விடயத்தில் கருசனை கொண்டிருப்பார்களோ என்று கூட எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு நம் அரசியல் தலைவர்கள் எமது தமிழ் மக்களுக்கு ஈனம் இழைத்து விட்டனர்.

உண்மை. எந்தப் பிரதிஉபகாரமும் எதிர்பாராமல் எம் தமிழினம் வாழ வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக நம் மக்கள் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பி வைத்தவர்கள்; எங்ஙனம் நடந்து கொண்டார்கள் என்பதை, மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தரின் செயற்பாடுகளில் இருந்து ஆராய்ந்தால், நாமே நமக்குப் பகை என்ற உண்மை உணரப்படும்.

ஆக, தமிழ்ப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைப்போம். அதற்காக உரிமையைப் பெற்றுத் தரக்கூடியவர்களைப் பாராளுமன்றம் அனுப்பி வைப்போம் என்பது மறுதலிக்கப்பட வேண்டிய கூற்றாகும்.

# ஐ.எம்.எப் இணக்கப்பாடு தொடர்பில் அரசிடம் தெளிவான கொள்கை இல்லை

## சாகல ரத்நாயக்க

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணி கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (20) நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி கடன் உதவிகளை பெற்றுக்கொள்ளவும் எமக்குக்கடன் வழங்கிய நாடுகளுடன் கலந்துரையாடி கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருந்தது.அந்த நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த மாதம் செப்டெம்பர் மாதத்துடன் இரு தரப்பு இணக்கப்பாடுகளுடன் பூரணப்படுத்தப்பட்டன.

என்றாலும் எமக்குத் தனிப்பட்ட ரீதியில் கடன் வழங்கி இருந்த எமில்டன் ரிசவ் வங்கி, இலங்கைக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. குறித்த வழக்கில், பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. என்றாலும் எமது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி, கடனை மீளச் செலுத்த கால அவகாசம் கோரி, எமது நீதிபதிகள் அமெரிக்க நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தது. அதன் பிரகாரம் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு குறித்த வழக்கு விசாரணை 6மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் சில தவணைகள் எமக்கு வழங்கப்பட்டன.

இந்த நிலையில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து, அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளுக்கு எதிரான கருத்துடையது. அதனால் எமக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்த, எமில்டன் ரிசவ் வங்கி, கடந்த முதலாம் திகதி மீண்டும் வழக்குத் தொடுத்திருந்தது.

இலங்கை அர சாங்கம் அதற்கு பதிலளிக்கும்வகையில் கடந்த 4 ஆம் திகதி தனது நிலைப்பாட்டை அறிவித்து அமெரிக்க நீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிறது. அதில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையும்கடன்மறுசீரமைப்பு நடவடிக்கையையும் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் முன்னெடுத்துச்செல்வதாகத் தெரிவித்திருக்கிறது.

ஆனால் எமக்குள்ள பிரச்சினை என்னவென்றால், நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை மாற்றியமைக்க பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்கள் வழங்க வேண்டும் என ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

ஆனால் நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக இணக்கப்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுள்ளது. அவ்வாறு எட்டப்பட்ட இணக்கப்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வதாக அரசாங்கம் சர்வதேசத்துக்கும் அமெரிக்க நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கிறது.

இவ்வாறு சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன்மறுசீரமைப்புத்தொடர்பில் மக்களிடம் ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டத்தை அவ்வாறே முன்னெடுப்பதாக சர்வதேசத்திடம் தெரிவித்து வருகிறது.

அதனால் நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை.

அதேநேரம் புதிய ஜனாதிபதி ஒருவர் பதவி ஏற்றால் முதலாமாக அவர் தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை பாராளுமன்றத்திலோ அல்லது மக்கள் முன்னிலையிலோ முன்வைக்க வேண்டும்.

ஆனால் அநுரகுமார திஸாநாயக்க இதுவரை அவ்வாறு எதனையும் தெரிவிப்பதைக் காணவில்லை என்றார். (ம-7)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு

ராகம, தேவத்த தம்புவ சந்திக்கிளை வீதியொன்றில், தேவத்தையில் இருந்து தம்புவசந்தித் திசை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளை, சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி, மின்கம்பத்தில் மோதிவிபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் சாரதி, ராகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தலியத்தபாலுவ, ராகம பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ராகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## புதையல் தோண்டியவர் குருநாகலில் கைது

குருநாகல், மெல்சிறிபுர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஹேவனதென்ன பிரதேசத்தில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (20) கைது செய்யப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மெல்சிறிபுர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குருநாகல், மெல்சிறிபுர பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து, புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள், 04 ஜெலட்நைட் குச்சிகள், 06 டெட்டனேட்டர் மற்றும் இரசாயனப் பொருட்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெல்சிறிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஏரியில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் பலி

கஹட்டகஸ்திகிலிய, இஹல கங்ஹிடிகம ஏரியில் நீராடச் சென்ற நான்கு இளைஞர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு இளைஞர்களும் மது அருந்திவிட்டு இஹல கங்ஹிடிகம ஏரியில் நீராடியுள்ளனர். இதன்போது இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் 24 மற்றும் 34 வயதுடையவர்கள் எனவும், இருவரும் பொல்கஹவெல மற்றும் புஜாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11

இந்தியத் தமிழர் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேற்ற இரண்டு கட்சிகளும் தேர்தல் வாக்குறுதிகளைத் தந்தன. அத்துடன் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தவும் உறுதி பூண்டன.

டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்களில் அதிக இடங்களைக் (50 ஆசனங்கள்) கைப்பற்றியது. ஆனாலும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை. எதிர்க் கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்றதை அடுத்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. யூலை 1960 இல் மறு தேர்தல் இடம்பெற்றது.

கிடைக்கப்பெற்ற ஆசனங்கள் பின்வருமாறு ஐக்கிய தேசியகட்சி-50, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி-46, இலங்கைத் தமிழரசுக்கட்சி-15, லங்காசமசமாஜகட்சி- 10, மக்கள் ஐக்கிய முன்னணிகட்சி-10, லங்கா ஜனநாயகக்கட்சி-4, இலங்கைகம்யூனிஸ்ட்கட்சி-3, தேசிய விடுதலை முன்னணி- 2, அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ்-1, சோசலிச மக்கள் முன்னணி-1, இலங்கை தேசிய முன்னணி-1, போதிசத்துவ பண்டார நாயக்க முன்னணி-1, சுயேட்சை- 7 ஆகும்.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 5 ஆவது பாராளுமன்றத் தேர்தல்-1960 ஜூலை

இலங்கையின் 5 ஆவது பாராளுமன்றத்தேர்தல் 1960 ஜூலை 20 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது.

டட்லி சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையே கொண்டிருந்தது. அதே வேளையில், சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக்கட்சிக்குமாறாக இடதுசாரிப் போக்கைத் தமது பொருளாதாரக் கொள்கைகளில் கொண்டிருந்தது. தனியார் துறை மற்றும் சமயப் பாடசாலைகளை அரசுடமையாக்கல் இக்கட்சியின் முக்கியகொள்கையாக இருந்தது.

சுதந்திரக்கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது. பண்டாரநாயக்கா இலங்கைப் பிரதமரானார். இத்தேர்தல் இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முக்கியத்துவம் பெற்றது. இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முதலாவது பெண் பிரதமராக பண்டாரநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டமையே சர்வதேச அரங்கில் முக்கியத்துவத்தைப் பெற காரணமாயிற்று.

கிடைக்கப்பெற்ற ஆசனங்கள் பின்வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி -75, ஐக்கிய தேசியகட்சி-30, இலங்கைத் தமிழரசுக்கட்சி -16, லங்காசமசமாஜ கட்சி- 12, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி-4, மக்கள் ஐக்கிய முன்னணிகட்சி- 3, லங்கா ஜனநாயகக்கட்சி- 2, தேசியவிடுதலை முன்னணி- 2, அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ்-1, சுயேட்சை- 6 ஆகும்.

பண்டாரநாயக்க கட்சித் தலைவர் (SLFP) என்றரீதியில், 1960 ஜூலை 21 ஆம் திகதி பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தினால், பிரதம மந்திரியாகத் தொடர்ந்திருப்பதை இயலுமாக்குவதற்காக 1960 ஓகஸ்ட் 2 ஆம் திகதி செனற்றிற்கு இவர் உறுப்பினராகநியமிக்கப்பட்டார்.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 6 ஆவது பாராளுமன்றத்தேர்தல்-1965

1964 ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து, இலங்கையின் 6 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1965 மார்ச் 22 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத்தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது.

1964 டிசம்பரில் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தேசியமயமாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து சில உறுப்பினர்கள் வெளியேறியதை அடுத்து சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசு பாராளுமன்றத்தில் பலம் இழந்தது. பண்டார நாயக்காவின் தாராள தேசியமயமாக்கல் கொள்கை காரணமாக இலங்கைத் தீவின் வணிக சமூகத்தினரின் அதிருப்திக்கு அவர்கள் ஆளாக வேண்டி வந்தது.

இதனால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்தது. தீவிர உணவுப் பற்றாக்குறையால் உணவுப் பங்கீட்டு முறை நாட்டில் அமுல்படுத்தப்பட்டது.

சுதந்திரக் கட்சிக்கும் அவர்களுடன் மார்க்சியக் கூட்டணிக்கும் எதிராக தேசிய முன்னணி ஒன்றை அமைக்க விருப்பதாக ஐ.தே.க வாக்குறுதி அளித்தது. சிங்களத் தேசியவாதிகளுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் அமைச்சுப் பதவிகள் வழுங்கப்படும் என ஐ.தே.க தலைவர் டட்லி சேனநாயக்கா வாக்குறுதி அளித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. ஆனாலும், ஐ.தே.க தலைவர் டட்லி சேனநாயக்கா இலங்கைத் தமிழரசுக்கட்சியினரின் ஆதரவுடன் ஆட்சியை அமைத்து இலங்கையின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். கொழும்பு தெற்குத் தொகுதியில் (இரட்டை அங்கத்தவர்கள் தொகுதி) ஜே. ஆர். ஜெயவர்தன (ஐ.தே.க), பெர்னார்ட்சொய்சா (ல.ச.ச.க) ஆகியோர் போட்டியின்றித் தெரிவாகினர்.

கிடைக்கப்பெற்ற ஆசனங்கள் பின்வருமாறு ஐக்கியதேசிய கட்சி-66, ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி -41, இலங்கைத்தமிழரசுக்கட்சி-14, லங்காசமசமாஜ கட்சி-10, ஸ்ரீலங்கா சுதந்திர சோசலிசக்கட்சி-5, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி- 4, அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ்-3, மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி-1, தேசிய விடுதலை முன்னணி-1, சுயேட்சை- 6, மொத்தம்-151 ஆகும்.

1965 ஏப்ரல் 5 ஆம் திகதி தனது முதலாவது கூட்டுத்தொடரை ஆரம்பித்த இலங்கையின் ஆறாவது பாராளுமன்றமானது 1970 மார்ச் 25ஆம் திகதி பிரதமர் டட்லி சேனாநாயக்கவினால் கலைக்கப்பட்டது.

### சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் 7 ஆவது பாராளுமன்றத் தேர்தல்-1970

இலங்கையின் 7ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1970 மே 27 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத் தேர்தல் நடத்தப்பட்டது. முக்கிய எதிர்க் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மார்க்சிய இடதுசாரிகளுடன் நீண்டகால கூட்டணியை ஏற்படுத்துவதே சரியானதாகும் எனத் தீர்மானித்தார்.

இதற்கமைய அவர் திரொக்சியவாதிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஆகியவற்றுடன் இணைந்து ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கினார். பொதுத் திட்டம் என அழைக்கப்பட்ட இவர்களின் கூட்டுத் திட்டத்தில், பரவலான தேசியமயமாக்கல், சோவியத் சார்பு வெளியுறவுக் கொள்கை, சோல்பரி அரசியலமைப்பை ஒழித்தல் போன்றவை முக்கிய அம்சங்களாக இருந்தன.

மாறாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு முதலாளித்துவப் போக்கைக்கடைப்பிடித்துவந்தது. அது பணக்காரர்களின் கட்சி என்ற பெயரைப் பெற்றது. இதனால் சாதாரண மக்களிடையே ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் எளிதில் செல்வாக்கைப் பெற்றது.

ஐக்கிய முன்னணி பெரும் வெற்றியைப் பெற்றது. மொத்தம் 151 இடங்களில் ஐக்கிய முன்னணி 116 இடங்களைக் கைப்பற்றியது. இத் தேர்தலில் வெலிமடைத் தேர்தல் தொகுதியில் ஆர். எம். பண்டார (ஐக்கிய முன்னணி) போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். பண்டார நாயக்கா இலங்கைப் பிரதமரானார்.

சுதந்திர இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களுள் 2/3 பலத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஆளும் கட்சிக்கு கிடைத்தமை இத் தேர்தலின் முக்கிய அம்சமாகும். தேர்தலின் போது ஐக்கிய சோசலிஸ முன்னணியினர் (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி- 91 ஆசனங்கள், லங்காசமசமாஜகட்சி -19 ஆசனங்கள், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி- 6 ஆசனங்கள்) 151 ஆசனங்களில் 116 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

மற்றைய கட்சிகளுக்கு கிடைக்கப்பெற்ற ஆசனங்கள் பின்வருமாறு. ஐக்கியதேசியக்கட்சி -17, இலங்கைத்தமிழரசுக்கட்சி-13, அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ்-3, சுயேட்சை- 2, மொத்தம்-151 தமிழ் பேசும் பகுதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் வெற்றி பெற்றன. தமிழ் காங்கிரஸ் கட்சியின் மூன்று உறுப்பினர்களும் பின்னர் ஐக்கிய முன்னணியில் இணைந்தனர். சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இடம் பெற்ற தேர்தல்களில் 1970 தேர்தல்களே கடைசித் தேர்தல்களாகும்.

1972, மே 22 ஆம் நாள் காலனித்துவ டொமினியன் ஆதிக்கத்தில் இருந்த இலங்கை அதனைக் கைவிட்டு குடியரசானது. பிரித்தானியர் வசம் இருந்த தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டன. அத்துடன் வறிய கிராம மக்களுக்கு நிலம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றழுத்த...

மற்றும் மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

குறித்த கடற்பிராந்தியங்களில் காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைந்து வருகின்றமையினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வுநிலை நாளை புயலாக வலுப்பெறுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தற்போது குறித்த கடற்பிராந்தியங்களில் கடல்சார் தொழிலில் ஈடுபடுவோரும் மீனவர்களும் உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## காங்கேசன்...

காமம் வடக்குப் பகுதியில் வசித்து வந்த மக்கள் 1990ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறிச் சென்றிருந்தனர்.

சுமார் 34 வருடங்களின் பின்னர் அப்பகுதி மக்களை மீளக் குடியமர அனுமதிகள் வழங்கப்பட்ட நிலையில், ஐயனார் ஆலயம் மீள அப்பகுதி மக்களால் புனரமைப்புச் செய்யப்பட்டு, புதிதாகப் பரிவாரத் தெய்வங்களுக்கான சந்நிதிகள் அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று ஐயனார், பெருமளவு அடியவர்கள் சூழ கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

கும்பாபிஷேக நிகழ்வுகளை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை விநாயக வழிபாட்டோடு கிரியைகள் ஆரம்பமாகி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களாக விநாயக வழிபாட்டோடு எண்ணெய் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 6.30 மணிக்கு விநாயக வழிபாட்டோடு மஹா கும்பாபிஷேகப் பூஜைகள் ஆரம்பமானது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ம-7,33)

## பொதுத்...

யின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், ஏனைய உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான திகதி ஒக்ரோபர் 4 முதல் ஒக்ரோபர் 11 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## திருத்த...

ஏற்படும் வகையில் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

மக்கள் சந்திப்பில், கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், தற்போதைய அரசாங்கத்திற்குச் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை மீளாய்வுக் குட்படுத்த முடியாமல் போயுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை தமது கடனை 2032ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் செலுத்த முடியும் என சர்வதேச நாணய நிதியம் வாய்ப்பளித்திருந்தது.

எனினும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் 2028 ஆம் ஆண்டிலிருந்து கடனை மீளச் செலுத்த முடியும் எனத் தெரிவித்து, உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

இதனால் எமக்குக் கிடைக்கப் பெற்ற சலுகைக் காலத்தில் 4 வருடங்கள் இல்லாமல் போயின.

எனினும், அந்தக் காலப்பகுதிக்குள் மீண்டும் கடனைச் செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பிப்பதனால், நாட்டின் உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

அதற்கான எந்தவொரு முயற்சியையும் தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

எனவே தமது அரசாங்கத்தில் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையைத் திருத்தி, அதன் நன்மைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## வன்னி...

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக வன்னி மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தங்களது வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி எடுத்த தீர்மானத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புத் தாக்கல் செய்த மனுவை இன்று செவ்வாய்க்கிழமை பரிசீலிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தங்களது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து, ஜனநாயக தேசியக் கூட்டமைப்புத் தாக்கல்செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரீத்தி பத்மன்சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணை இடம்பெற்றது.

இந்த விசாரணையின்போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம், தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆலோசனையைப் பெற்றதன் பின்னர் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்குக் காலஅவகாசத்தைக் கோரினார்.

அதனை ஏற்றுக் கொண்ட மன்று, குறித்த மனுவை இன்று பரிசீலிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-7)

## ரவி...

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கைகளை வெளியிடுவதற்காக கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்த ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் வெளியிடப்படாத இரண்டு அறிக்கைகளில் ஒன்றை இன்றும் (நேற்று) மற்றைய அறிக்கையை எதிர்வரும் திங்கட்கிழமையும் வெளியிடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கம்மன்பில அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பொலிஸாரின் முக்கிய விசாரணையில் சந்தேகநபராக மாறியுள்ள [illegible] அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவை உடனடியாக அப்பதவியில் இருந்து நீக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவின் குழு பரிந்துரைத்துள்ளது.

ரவி செனவிரத்ன அந்தப் பதவியில் இருக்கும்வரை பொலிஸாரிடம் இருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது.

குறிப்பாக ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்காது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான அனைத்து விபரங்களும் ரவி செனவிரத்னவிற்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச புலனாய்வுத் தகவல்களுக்கமைய ரவி செனவிரத்ன செயற்பட்டிருந்தால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைத் தடுத்திருக்கலாம் என்றார். (ம-7)

## ஜனாதிபதி...

பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

இல்லாவிட்டால்பாராளுமன்றத் தொடர் ஆரம்பமானவுடன் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வருவோம் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 5632
O 2 0 1 6 6 9
அத சம்பத
O 1 6 6 9
சீட்டிழுப்பு இலக்கம் 207

தன நிதானய
திகதி - 2024.10.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1662
L 11 12 33 79 L
Double Chance 033134

மெகா பவர்
திகதி 21/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1980
V 21 15 52 67 75
183729

லக்கி 7 VIP
திகதி 2024.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 0458
O 7 6 0 7 9 9 0 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3874
சீட்டிழுப்பு திகதி 21.10.2024
R 32 54 56 76
R 087939

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 941
மகரம் 21 30 36 53 மகரம்
103443 21

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.10.2024 வெற்றி வாரம் 340 வர்ணம் ஊதா
G 1 3 5 0 3 8
34411
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,151,496.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2606 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 21.10.2024 தினம் திங்கள்
23 33 51 68 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,205,937.60

சனிதா
திகதி 2024.10.21 வெற்றி வாரம் 4767
03 31 51 56 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,727,804.80
84232

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4318 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.21 தினம் திங்கட்கிழமை
04 37 52 56 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,610,896.80
182346

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 15 15 32 39 42
1782 பச்சை 21.10.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 551,645,633.80

ஜயோதா Jayoda
திகதி 2024.10.21 வெற்றி வாரம் 2070 வர்ணம் செம்மஞ்சள்
16 22 30 35 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,908,356.80

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2432
சீட்டிழுப்பு திகதி : 2024.10.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,085,362.40
22 28 43 57 M
760102


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பொதுச் செயலாளர் மீதான இஸ்ரேலின் தடை

## ஆதரவுக் கடிதத்தில் இலங்கை கையெழுத்து

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் இஸ்ரேலுக்குள் நுழைவதற்கு தடை விதித்துள்ள இஸ்ரேலைக் கண்டித்து 105 நாடுகள் கையெழுத்திட்ட கடிதத்தில் இலங்கை கையெழுத்திட்டுள்ளதாக ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச் செயலாளருக்கு ஆதரவளிக்கும் கடிதத்திற்கு அனுசரணை வழங்கிய சிலி தூதரகத்திடம் ஒக்டோபர் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட கடிதத்தில் தமது பெயரையும் இணைத்துக்கொள்ள நியூயோர்க்கில் உள்ள இலங்கை நிரந்தரத் தூதரகம் (ஐ.நா) கேட்டுக்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், கையொப்பமிட்ட நாடுகளின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் ஆளுமை அல்லாதவர் என்று அறிவித்திருந்தது.

மேலும் இஸ்ரேல் மீது ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்களை ஐ.நா செயலாளர் நாயகம் போதுமான அளவு விமர்சிக்கவில்லை என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சரும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்நிலையில், இஸ்ரேலின் நடவடிக்கையைக் கண்டிக்கும் கடிதத்தில் பிரேசில், இந்தோனேசியா, உகண்டா போன்ற உலகளாவிய தெற்கில் உள்ள பெரும்பாலான நாடுகளும், பிரான்ஸ், சுவீடன், சுவிட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளும் கையெழுத்திட்டன.

இஸ்ரேலுக்கும் ஐ.நாவுக்கும் இடையே பனிப்போர் அதிகரித்துள்ள பின்னணியில் இந்தக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்



மாவீரர் நாளினை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவின் ஏற்பாட்டில் இந்தச் சிரமதானப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டும் 2024.11.27 மாவீரர் நாளினை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கும் முகமாக பணிக்குழுவினால் அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக் கப்படவுள்ள நிலையில் அதன் ஆரம்ப கட்டமாக சிரமதானப் பணி ஆரம்பிக் கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கைக்கு...

விக்கப்பட்டுள்ளது. நாட்டில் வெற்றிகரமாக இயங்கிவரும் 'சுவசெரிய' சேவைக்கே இந்த அம்புலன்ஸ்களை வழங்க டாடா குழுமத்தின் புதிய தலைவர் நடராஜா சந்திரசேகரன், சுவசெரிய நிறுவுநர் ஹர்ஷ டி சில்வாவிடம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

சுவசெரிய சேவையில் தற்போது 297 அம்புலன்ஸ்கள் உள்ளன.

இவற்றின் மூலம் ஒருநாளில் ஆயிரத்து 50 நோயாளிகளுக்கு சேவை வழங்க முடியும்.

சுவசெரிய மூலமாக நாளொன்றுக்கு 50 மனித உயிர்களைக் காப்பாற்ற முடிகிறது என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். சுவசெரிய சேவைக்கு டாடா நிறுவனம் ஆரம்பத்தில் 2.3 கோடி டொலர்களை வழங்கியது. இந்த சேவையை நடத்துவதற்காக அரசாங்கம் 400 கோடி ரூபாயை செலவிடுகிறது. சுவசெரிய சேவையை தொழில்நுட்பத்துடன் உலகின் மிக வேகமான அம்புலன்ஸ் சேவையாக அறிமுகப்படுத்த முடியும் என உலக வங்கி அதிகாரிகள் பாராட்டியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## அரசாங்கம்...

வீழ்ச்சியடையும் ஆபத்து இருக்கிறது என முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று திங்கட்கிழமை (21) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மூலம் நிகழ்ந்த சமூக, அரசியல் நெருக்கடிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எமது அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை ஆரம்பித்தோம். அந்த நடவடிக்கை மிகவும் கஷ்டமானதாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைவதற்கு காரணமாக அமைந்தது வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, பொருளாதார பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட மிகவும் கஷ்டமான தீர்மானங்களாகும்.

அரசியல்வாதிகள் யாரும் எடுக்க முடியாத, மக்களுக்கு கஷ்டமான தீர்மானங்களே எடுக்க வேண்டி ஏற்பட்டது. அதனால்தான் இன்று பொருளாதாரம் ஸ்திரநிலைக்கு வந்துள்ளது.

2021,2022 காலப்பகுதியில் நாட்டின் அரச வருமான நூற்றுக்கு 8 வீத அளவிலேயே இருந்தது. என்றாலும் 2024 ஆகும்போது நாட்டின் வருமானத்தை நூற்றுக்கு 13.1 வீதமாக அதிகரித்துக்கொள்ள வேண்டியிருந்தது. எமது பொருளாதார திட்டமிடல் மூலம் அதனை அடைந்துகொள்வது எமக்கு பாரிய சவாலாக இருக்கவில்லை. அதேபோன்று பணவீக்கம் 2022 செப்ரெம்பர் மாதம் நூற்றுக்கு 70 என்ற எல்லைக்கு நெருங்கி இருந்தது.

அந்நிய செலாவணி 20 மில்லியன் டொலர்வரை குறைவடைந்தது. ரூபாவின் பெறுமதி 367 ரூபாவுக்கு இருந்தது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை இருந்தது. அதனால் நாட்டில் எரிபொருள், எரிவாயுக்கு வரிசை ஏற்பட்டது. 10மணி நேரம்வரை மின்சார துண்டிப்பு ஏற்பட்டது.அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டது.

இவ்வாறு 2022 முதல் சுருங்கி இருந்த பொருளாதாரத்தை 2023 இரண்டாம் காலாண்டில் இருந்து தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடையச் செய்து 2024ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டாகும்போது பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாக இருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என நாங்கள் நம்புகிறோம். வாக்குறுதிகளை நிறைவேற்றும் போது நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதனை மேற்கொள்வார் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு மற்றும் தனிப்பட்ட ரீதியில் எமக்கு கடன் வழங்கிய சர்வதேச நிறுவனங்களுடன் நாங்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை பாதுகாத்துக்கொண்டே இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டி யிருக்கிறது என்றார்.(ம-7)


## மணப்பெண் தேவை

- சங்கானை, இந்து, கௌரவ குடும்பம், 1992, விசாகம், BA(HONS)Accounting, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி - கந்தர்மடம், இந்து, கௌரவ குடும்பம், 1992, அவிட்டம், BEng(UK), UK Citizen, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- உடுப்பிட்டி - கரணவாய், இந்து, கௌரவ குடும்பம், 1990, அவிட்டம், BSc Engineering, Newzealand மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சுருவில் - வண்ணார்பண்ணை, இந்து, கௌரவ குடும்பம், அச்சுவினி, 1987, MSc, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புங்குடுதீவு, இந்து, கௌரவ குடும்பம், 1989, சுவாதி, MSc Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நெல்லியடி, இந்து, கௌரவ குடும்பம், 1990, மகம், Bachelor of Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வடலியடைப்பு, இந்து, கௌரவ குடும்பம், 1990,விசாகம், BSc, MBA, கொழும்பில் Consultant ஆக இருக்கும் மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவ குடும்பம், 1988, அனுசம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய் - சுன்னாகம், இந்து, கௌரவ குடும்பம், 1988, பூரட்டாதி, MBA, Financial Analyst, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சண்டிலிப்பாய், இந்து, கௌரவ குடும்பம், 1989, அனுசம், B.S and Post Graduate, Human Resource Analyst, USA, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(454)

- 077 539 3728 | - 077 803 8195

யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (464)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.

வயது எல்லை 25 - 40

தொடர்புகளுக்கு :

077 041 6405

Whatsapp

0031617990096(ஒல்லாந்து) (2333)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1431)

076 825 7716 (ஆகாஸ்)

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்...இன்னும் சில நாட்களே உள்ளன

அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L

0768226244

55000 இலவச விசாக்கள்



திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

V2 Travels

0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351

0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675

0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322

0764550671 | 0776699892 | 0768226236 | 0768226230 | 0776697960

TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

இலவச கருத்தரங்கு

26, 27 October 2024

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

இடம்: வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ். (C-1428)

தொடர்புகளுக்கு: 077 017 5346

வீடு வாடகைக்கு

Medical Faculty க்கு அண்மையாக கொக்குவில், பொற்பதி வீதி, பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 04 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (2373)

Whatsapp only: 077 7145 838

[ காலை 07 மணி முதல் மதியம் 02 மணி வரை தொடர்பு கொள்ளலாம் ]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.